திரு. ரா. ரா. முனுசாமி : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றும் பணியாளர்கள் 1969-லிருந்து மற்றொரு யூனியனுக்கு மாற்றப்படாது இருக்கிருர்கள். மாவட்ட ஆட்சித் தலைவருக்கு மாற்றுவதற்கான அதிகாரம் இருந்தும், 2 யூனியன்களும் ஒரு பணியாளரை ஏற்றுக் கொள்ள இசைந்து தீர்மானம் போட்டால் தான் ஒரு ஊராட்சி ஒன்றியத்திலிருந்து இன்னொரு ஊராட்சி ஒன்றியத்திற்கு மாற்றப்படுகிருர்கள். ஒரு பணியாளர் ஒரு ஒன்றியத்தில் தவறு செய்கிறபோது அவரை உடனடியாக வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் வழங்க அரசு வழிவகுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் முதலிலேயே சொன்னேன். மாவட்ட ஆட்சித் தலைவர் ஒருவரை அந்த ஒன்றியத்திலிருந்து மாற்றுவதால் ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்படும் என்று கருதிஞல், அவரை மாற்றுவதற்கு இப்போது மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் இருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, in many panchayat unions, the staff appointed at the beginning of the councils have not been transferred even though they have been there for more than 8 or10 years and on account of that many difficulties and troubles appear in the unions. May I know whether the officers even in panchayat unions would be transferred after three years ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நியமனக் குழு யார்யாரை எந்தெந்தப் பதவிகளில் நியமிக்கலாம் என்று தேர்ந்தெடுக்கிருர்கள். ஆனல் நியமிக்கிற அதிகாரம் ஆணையருக்கு வருகிறது. ஆகவே தான் மாற்றம் செய்வதில் இந்த வழி முறை இருக்கிறது. ஒரு பணியாளர் அந்த இடத்தில் பணியாற்றுவதால் நிர்வாகத்திற்குத் தீங்கு ஏற்படும் அல்லது சூழ்நிலை சீர்படும் என்று இருந்தால் மாற்றலாம் என்று இருக்கிறது. 3 ஆண்டு காலத்திற்கு ஒரு முறை மாற்றவேண்டுமென்று சூழ்நிலை ஏற்பட்டால் இப்போது இருக்கும் சங்கடங்களை விட, பிரச்சினைகளும் அதிகமாக வளரும்.

திரு. தி. பொன்னுமலை : தலைவரவர்களே, பல ஊராட்சி ஒன்றியங்களில் 10 ஆண்டு காலம் 20 ஆண்டு காலம் இருந்து கொண்டு இருக்கிற ஆசிரியர்கள் சிலர் அந்தப் பள்ளிகளை சரியாகக் கவனிக்காத சூழ்நிலை இருக்கிறது, ஆகவே, 3–4 ஆண்டு காலத்திற்கு ஒரு முறை அவசியம் அவர்களை மாற்றவேண்டுமென்ற விதிமுறையை ஏற்படுத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் அதைத்தான் முதலில் குறிப்பிட்டேன். ஆசிரியர்கள் காரணமாக தீங்கோ அல்லது வேறு பல சூழ்நிலைகளோ ஏற்பட்டால் அவர்களை மாற்றலாம். தவறுகள் ஏற்பட்டால் அவர்களை மாற்றலாம். அவசியமாக 3 வருடத்திற்கு ஒரு முறை மாற்றவேண்டுமென்று வைத்தால் அதிலே பல்வேறு இடர்ப்பாடுகள் ஆங்காங்கு ஏற்படும். தனியார் பள்ளிகளை எடுத்துக்

1973 மார்ச் 14]

கொண்டால் 30 ஆண்டு காலம் 35 ஆண்டு காலம் ஒரே இடத்தில் ஒரே பள்ளியில் பணிபுரிந்து வருகிறார்கள். ஆகவே மூன்று ஆண்டு காலத்திற்கு ஒருமுறை மாற்ற வேண்டுமென்பது இல்லை. அவர்களாக விரும்பிக் கேட்டால், கணவன் மனைவி ஒரேயிடத்தில் சேர்ந்து இருக்கவேண்டுமென்று விரும்பினால் அவர்களை மாற்றம் செய்கிறோம். பள்ளியின் கட்டுப்பாடு அல்லது ஒழுங்கிற்கு தீங்கு ஏற்பட்டால் அப்படிப்பட்ட நிலையில் ஆசிரியர்கள் மாற்றப்படுகிறார்கள். அப்படிப்பட்ட முறை வைத்துக் கொள்வதுதான் நல்லது. மூன்றாண்டுக்கொருமுறை மாற்றும் நிலை வைத்துக்கொண்டால் அதிலே பல்வேறு சங்கடங்கள் வரும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு வை. பாலசுந்தரம், திரு கே. எஸ். கோதண்டராமையா இருவரும் இடம் மாறி உட்கார்ந்து இருக்கிறீர்கள் என்று கருதுகிறேன்.

திரு. வை. பாலசுந்தரம்: துணைத் தலைவரவர்களே, நகராட்சிகளில், ஊராட்சிகளில் தாழ்த்தப்பட்டவர்கள்-பிற்படுத்தப்பட்டவர்கள் ஆகியவர்களுக்கு 17 சத வீதம்—31 சத வீதம் ஒதுக்கப்படுவது இல்லை என்று சொல்லப்படுகிறது. அதைத் தவிர்க்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: எங்கேயாவது அத்தகைய குறைபாடு இருக்கிறது என்று காணப்பட்டால், அது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால், அதை நிவர்த்திக்க அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, நிர்வாகக் காரணங்களுக்காக மாற்றுவதற்கு இப்போது இருக்கும் விதிமுறைகளில் கஷ்டம் இருக்கிறது. அதைப்பற்றி அரசாங்கம் என்ன விளக்கம் தர இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இப்போது நிர்வாகக் காரணங்களுக்காக மாற்றுவதற்கு விதிமுறைகளில் இடமிருக்கிறது. ஏற்கனவே ஒரு அட்-ஹாக் கமிட்டி போட்டோம். இப்போது இருக்கும் அதிகாரம், ஆணையர் கல்வித்துறை அதிகாரிகளோடு கலந்து கொண்டு மாற்றலாம் என்ற முறையில் இருக்கிறது.

மதுராந்தகம் அரசு மருத்துவ மனை

* 361 வினா—திரு. சி. ஆறுமுகம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் நகரிலுள்ள அரசு மருத்துவமனையில் வெளி நோயாளிகள் பிரிவுக் (Out-patient block) கட்டடத்தைப் புதுப்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1973 மார்ச் 14

திரு. த. சோனையா : தலைவரவர்களே, மதுரையிலே இருக்கின்ற புற்று நோய் . . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது மதுராந்தகம் நகரிலுள்ள மருத்துவமனை பற்றிய கேள்வி. அடுத்த கேள்வியில் இதுபற்றி கேளுங்கள்.

திரு. எஸ். ஆறுமுகம் : தலைவரவர்களே, இந்த ஆண்டு அந்த மருத்துவ மனைக் கட்டடத்தைப் புதுப்பிக்காவிட்டாலும், அடுத்த ஆண்டாவது புதுப்பிக்க அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, ஓராண்டுக்கு முன்னர் அங்கே ஒரு கட்டடம் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டு இருக்கிறது. அது சம்பந்தமாக சில காரியங்கள் ஏற்கனவே நிறைவேறி விட்டன. ஆகவே, இப்போது பரிசீலனையில் இல்லை.

Cancer Unit at Madurai.

*362 *Q.*— Thiru J. JAMES : Will the **Hon.** the **Minister for Public Health** be pleased to state—

(*a*) whether it is a fact that the Cancer Unit at Madurai is likely to be closed down due to non-availability of ethyl alcohol and rectified spirit ; and

(*b*) if so, the action taken by the Government to get over the difficulty and to run the unit ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) கேள்வி எழவில்லை.

திரு. த. சோனையா: தலைவரவர்களே, மதுரையிலுள்ள மாவட்ட மருத்துவ மனையில் புற்று நோய் சிகிச்சைப் பிரிவில் இயங்குகிற கதிர் சிகிச்சை இயந்திரம் பழுது அடைந்து விட்டதாகச் சொல்லப்படுகிறது. அது பழுது பார்க்கப்பட்டு விட்டதா, இல்லையென்றால் இனிமேலாவது பழுது பார்க்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: பழுதுபட்டதாகத் தகவல் இல்லை. ஆனால் அதற்குக் கிடைக்க வேண்டிய ஈதைல் ஆல்கஹால், ரெக்டிபைடு ஸ்பிரிட் கிடைக்கவில்லை என்று தெரிவித்து இருக்கிறார்கள்.

Absolute alcohol has not been supplied from any sourse என்று சொல்லியிருக்கிறார்கள்.